1972 மார்ச் 24]

மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகைகள்

*670 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாணவர்களுக்கு உதவித் தொகை எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நல்ல திறன்மிக்க இந்திய மாணவர்களுக்கு, அவர்கள் பள்ளியிறுதித் தேர்வு அல்லது பல்கலைக் கழக இறுதித் தேர்வுகளில் முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்தவராக இருந்தால், அவர்கள் பெற்ற மதிப்பெண் வரிசைப்படி முதல் பட்டப்படிப்பு முடிவுறும் வரை உதவித் தொகை பெறத் தகுதியுடையவராகிறார்கள்.

மற்றும் அத்தகைய மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஆண்டு வருமானம் ரூ. 6,000-க்கும் மேற்படாமல் இருக்க வேண்டும். பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் மக்களுக்கெனவும் தனிப்பட்ட வகையில் உதவித் தொகை அளிக்கும் ஒரு திட்டமும் நடைமுறையில் உள்ளது.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் தாழ்த்தப்பட்டோர், அட்டவணையில் கண்ட பழங்குடியினர் அன்றி, பின் தங்கிய வகுப்பினராகிய மாணவர்களுக்கு, குறிப்பிட்டுள்ள ஆண்டு வருமான நிலைக்குட்பட்டு, சம்பள உதவித் தொகை பிற்பட்ட நலத் துறையினரால் வழங்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் மாணவர்களுக்கு வழங்குகின்ற உதவித் தொகை எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது? அது மத்திய சர்க்கார் மூலமாக வழங்கப்படுகிறதா? அல்லது மாநில சர்க்கார் மூலமாக வழங்கப்படுகிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே திறமை மிக்க மாணவர்களுக்கு 'மெரிட்' அடிப்படையில் உதவித் தொகை தரப்படுகிறது. ஆசிரியர்களுடைய பிள்ளைகளுக்கும் உதவித் தொகை தரப்படுகிறது. திறமைதான் முக்கியமாகக் கருதப்படுகிறது. இது மாநில அரசாங்கத்தின் மூலமாகத்தான் தரப்படுகிறது.

திரு. தொ. ப. சீனிவாசன்: தலைவர் அவர்களே, பிற்பட்ட ஏழை மாணவர்களுக்கு மானியம் வழங்குவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பொதுவாக ஒரு ஜாதி இருக்கிறது என்று சொன்னால் அந்த ஜாதியிலே பல இடங்களில் உப பிரிவுகள் பெயரை வைத்து அழைக்கிறார்கள். பெற்றோர்கள் அந்த உப பிரிவுகளை தங்கள் பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்கும்பொழுது சொல்லிவிடுகிறார்கள், அதை எஸ். எஸ். எல்.சி. புத்தகத்தில் குறித்துவிடுகிறார்கள். இதனால் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்று தாசில்தாரிடம் சர்டிபிகேட் கேட்கும்பொழுது அவர் கொடுக்க மறுக்கிற காரணத்தினாலே பல ஏழை மாணவர்கள் உபகாரச் சம்பளம் பெற முடியாமல் போய்விடுகிறது. எனவே இந்த உப-பிரிவுகளை சேர்ந்த மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற உப பிரிவுகளை பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கலாமா இயலாதா என்பதை பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மூலம் ஆராய்ந்து முடிவு எடுக்கலாம்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, பட்டப்படிப்புப் படித்து விட்டு வேலையில்லாமல் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு வேலை கிடைக்கிற வரையிலும் உதவித் தொகைகள் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

***671—வின: திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

தமிழ்க் கல்லூரி மாணவர்களுக்கும், தமிழாசிரியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்களுக்கும உதவித் தொகை அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—இல்லை.

Stipends for students

* 672 *Q.*—THIRU E. S. THYAGARAJAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the stipend for the students undergoing teacher's training; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:—(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இ. எஸ். தியாகராசன்: தலைவர் அவர்களே, கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன்னதாக என்ன தொகை அளிக்கப்பட்டதோ அதே தொகைதான் இப்பொழுதும் அளிக்கப்பட்டு வருவதால் அந்த மாணவர்கள் மிகவும் துன்ப படுகிறார்கள். எனவே அதை உயர்த்தித் தருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கு ஆட்கள் வராத காரணத்தினாலே அதனை ஊக்குவிக்கின்ற முறையிலே அந்த தொகை கொடுக்கப்பட்டது. இப்பொழுது அப்படியில்லை 300 இடங்களுக்கு 3,000 பேர்கள் வருகிறார்கள். எனவே கொடுக்கின்ற பணத்தைக்கூட நிறுத்திவிடலாமா என்று கூட ஆலோசிக்கப்பட்டது. ஆனால் கல்வி ஆலோசனைக் குழு கொடுக்கப்படுகிற தொகையை நிறுத்தவேண்டாம் என்று கூறியதன் காரணத்தினாலேதான் கொடுக்கப்பட்டு வருகிறது. மாதம் 18 ரூபாய் வீதம் 21 மாதங்களுக்கு 378 ரூபாய் அளவுக்குப் பெறுகிறார்கள். ஆகவே அதை உயர்த்துவதாக இல்லை.